படிவம் –II

## அங்கீகார சான்று ( Certificate of recognition)

(விதி எண்.12 கீழ் உபவிதி 4 ஐக் காண்க)

---

தந்தி:

மின்அஞ்சல்:dmschennai2010@gmail.com

தொலைபேசி : 044–28270169

தொலைநிகரி: 044–28251108

---

## மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகம், சென்னை–6.

ந.க.எண்.5434/ஆ4/2013 நாள். .09.2013

பெறுநர்

தாளாளர்

அருணோதயா மெட்ரிகுலேஷன் பள்ளி,

மஞ்சாலுமூடு, கன்னியாகுமரி மாவட்டம் – 629151.

அய்யா/ அம்மா

பொருள்: தமிழ்நாடு குழந்தைகள் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்ட விதி 2011 விதி 12 உபவிதி (4) மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் விதித்தொகுப்பின் கீழ் அங்கீகார சான்று வழங்குதல் – சார்பாக.

பார்வை:
1. அரசாணை (2டி) எண்.48, ப. க (எக்ஸ்–2) துறை, நாள் 21.07.2004.
2. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண். 1 / பிசி / 2007, நாள் : 09.08.2007.
3. தாளாளர், அருணோதயா மெட்ரிகுலேஷன் பள்ளி, கடித நாள் 5.8.2013
4. திருநெல்வேலி மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் ஆய்வாளரின் கடிதம்
5. குழந்தைகள் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009.
6. தமிழ்நாடு இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை விதிகள் 2011.
7. தமிழ்நாடு பள்ளிகள் ( கட்டண நிர்ணயம்) சட்டம் 22/2009.
8. தமிழ்நாடு சமச்சீர் கல்வி சட்டம் 2010.
9. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் கடிதம் 619/2008, நாள்.26.11.2009 மற்றும் 07.12.2009.
10. மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பு W.P.No.95/2010, நாள். 12.04.2012.

-----

பார்வை (3)ல் காணும் 23.8.2013ம் நாளிட்ட தங்கள், விண்ணப்பத்தின், தொடர்ச்சியாக தங்கள் பள்ளியினை ஆய்வு செய்து வழங்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டம், மஞ்சாலுமூமு அருணோதயா மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு எல்.கே.ஜி முதல் 8 வகுப்புகளுக்கு 01.06.2012 முதல் 31.05.2015 முடிய உள்ள காலத்திற்கு மெட்ரிகுலேஷன் விதித் தொகுப்பு மற்றும் அதனைச் சார்ந்த அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு இலவச கட்டாய மற்றும் கல்வி உரிமைச் சட்ட விதிமுறைகளின்படியும் மற்றும் அதனையொட்டி வெளியிடப்பட்ட சட்ட விதிகள் மற்றும் அரசாணை அடிப்படையிலும், தற்காலிக அங்கீகாரம் வழங்கப்படுகிறது என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

த.பி.பா..

தங்கள் பள்ளிக்கு அளிக்கப்படும் அங்கீகார குறியீட்டு எண்.

**27–M – 0085– 0515**

**மேற்படி தற்காலிக அங்கீகாரம் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது:**

1. இப்பள்ளி இலவச கட்டாய மற்றும் கல்வி உரிமைச்சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு இலவச மற்றும் கல்வி உரிமைச்சட்ட விதிகள் 2011, ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது வழிவகை / காப்புரைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
2. பள்ளியில் முன்பருவ / பள்ளிக்கு முந்தைய வகுப்பில் / முதல் வகுப்பில், அருகாமை பகுதியில் உள்ள நலிவடைந்த / வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினருக்கு, வகுப்பில் மொத்த சேர்க்கையில் 25% க்கு குறையாமல் சேர்க்கை செய்யப்பட்டு 8ம் வகுப்பு முடிக்கும் வரை அவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளித்திட உறுதி செய்யப்பட வேண்டும்.
3. பள்ளியில் கல்வி கட்டணத் தொகை ஈடு செய்ய ஏதுவாக தனியாக வங்கி கணக்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.
4. பள்ளி பெற்றோர்களிடமிருந்து நன்கொடை (captitation) ஏதும் வசூலிக்கக் கூடாது. மேலும் குழந்தைகளுக்கு சேர்க்கை நிமித்தம் எவ்வித தேர்வோ / நேர்காணல் தேர்வோ நடத்தக்கூடாது.
5. எந்த ஒரு குழந்தைக்கும், (a) பள்ளி வயதுக்கான சான்று அளிக்காத காரணத்திற்காகவோ, (b). சாதி, இன, மத அடிப்படையிலோ அல்லது பிறந்த இடம் அடிப்படையிலோ, வேறு காரணத்திற்காகவோ சேர்க்கை மறுக்கப்படக் கூடாது.
6. பள்ளி நிர்வாகம் கீழ்க்குறித்த காரணிகளை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(அ). சேர்க்கை செய்யப்பட்ட எந்த ஒரு குழந்தையும் தொடக்கக்கல்வி (VIII– ஆம் வகுப்பு ) முடியும் வரை நீக்கம் செய்யக் கூடாது.

(ஆ). எந்த ஒரு குழந்தையையும் உடல் ரீதியாக / மன ரீதியான துன்புறுத்தலுக்கு ஆட்படுத்தக் கூடாது.

(இ). தொடக்கக் கல்வி முடியும் வரை குழந்தைகளை எவ்வித பொதுத் தேர்வுகளுக்கும் ஆட்படுத்தக்கூடாது.

(ஈ). தொடக்கக் கல்வியினை நிறைவு செய்யும் குழந்தைகளுக்கு விதி எண். 21 (ல்) தெரிவிக்கப்பட்டவாறு சான்று அளிக்கப்பட வேண்டும்.

(உ ). மாற்றுத் திறனாளி குழந்தைகள் / சிறப்பு கவனம் அளிக்கப்பட வேண்டிய குழந்தைகளுக்கு உரிய விதித் தளர்வுகளுடன் சேர்க்கை அளிக்கப்பட வேண்டும்.

(ஊ). இச்சட்ட விதி எண். 23(1) ன்படி குறைந்தபட்ச முழுக் கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்களே பணியில் அமர்த்தப்பட வேண்டும்.

(எ). அவ்வாறு குறைந்தபட்ச கல்வித் தகுதி பெறாத ஆசிரியர்கள் இச்சட்டம் செயல்முறைக்கு வந்த நாளான 01.04.2010 முதல் 5 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறவேண்டும்.

(ஏ). விதி எண்.24 உப விதி (1) ன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஆசிரியர்கள் தங்கள் பணியினை மேற்கொள்ள வேண்டும். எந்த ஒரு ஆசிரியரும் தனிப் பயிற்சி (tuition) வகுப்பு எடுத்திட பள்ளி நிர்வாகம் அனுமதிக்கக் கூடாது.

7. தமிழ்நாடு பள்ளிக்கல்வி பொதுக்கல்வி வாரியத்தால் ஒப்பளிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் மற்றும் அரசு ஆணை எண்.143 ப.க.(எக்ஸ்2) துறை நாள்.19.09.2011ல் வரையறுக்கப்பட்ட முப்பருவ பாடமுறை மற்றும் தொடர் முழு மதிப்பீட்டு முறை பள்ளிகளில் தவறாது பின்பற்ற வேண்டும்.
8. சட்டபிரிவு 19ல் தெரிவிக்கப்பட்ட வரையறை மற்றும் தரங்களை (norms & standards) பள்ளிகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
9. பள்ளி வளாகத்திலோ அல்லது வெளியிடத்திலோ பள்ளியின் பெயரால் அங்கீகாரம் பெறாத பள்ளிகள் ஏதும் செயல்படக் கூடாது.
10. பள்ளிக் கட்டடம், கல்விப் பணிக்காக அல்லது கல்வி திறன் வளர்ப்பு பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.
11. தமிழ்நாடு பதிவு பெற்ற சங்கங்கள் விதி 1975ன் படி ஒரு சங்கமாகவோ அல்லது பதிவு பெற்ற அல்லது நடைமுறையிலுள்ள சட்டபடி அமைக்கப்பட்ட பொது றக்கட்டளையால் பள்ளி நிர்வகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. பள்ளி தனி நபர் இலாபத்திற்கோ, குழுக்களின் லாபத்திற்கோ அல்லது கூட்டு நபர்கள் லாபத்திற்கோ பள்ளி செயல்படல்கூடாது.

13. பள்ளிவரவு செலவுக் கணக்குகள் பட்டயக் கணக்காயரால் முறைப்படி ஆய்வு செய்து அதன் நகல் அதிகார பூர்வ அலுவலருக்கு அளித்தல் வேண்டும். இக்கணக்குகள் ஆண்டுதோறும் அங்கீகாரம் அளித்திட அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

14. பள்ளி அங்கீகார குறியீடு அனைத்து கடிதத் தொடர்பிலும் தவறாது குறிப்பிடப்பட வேண்டும்.

15. துறையால் அவ்வவ்போது கோரப்படும் அறிக்கைகள் / தகவல்களையும் பள்ளி நிர்வாகம் உடனுக்குடன் அனுப்பி வைக்கவேண்டும். பள்ளி அங்கீகாரத்தை நிறைவு செய்திடவும் / பள்ளி நடைமுறையில் எழும் சிக்கல்களை நிவர்த்தி செய்து பள்ளி தொடர்ந்து நடைபெற நிர்வாகத்தால் / அரசால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளை பள்ளி நிர்வாகம் கண்டிப்பாக கடைபிடிக்கவேண்டும்.

16. இச்சட்ட விதிகள், மற்றும் வரையறைகள் மற்றும் அங்கீகாரத்திற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறியதாக கண்டறியப்படும் பட்சத்தில் இந்த அங்கீகார ஆணை திரும்ப பெறப்படும்.

17. மெட்ரிகுலேஷன் விதித் தொகுப்பு விதி எண்.14 உபவிதி (3)ன்படி ஒரு வகுப்பில் அதிகபட்சமாக 4 பிரிவுகள் மட்டும் செயல்படவேண்டும். கூடுதலாக 1 பிரிவு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அனுமதி அளித்தால் மட்டுமே தொடங்கப்படவேண்டும்.

18. தமிழ்நாடு தனியார் பள்ளிக் கட்டண நிர்ணயக்குழு சட்டம் 2009ன்படி பள்ளிக்கு கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கட்டணம் மட்டுமே மாணவர்களிடமிருந்து கட்டணமாக வசூலிக்கவேண்டும்.

19. பள்ளிகளில் பாதுகாப்பு நலன் கருதி கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் சார்ந்து அரசு வெளியிட்டுள்ள அரசாணை எண்131 பள்ளிக் கல்வி ( எக்ஸ்–2) துறை, நாள்.10.09.2006ல் தெரிவிக்கப்பட்டுள்ளது அந்நெறிமுறைகளைத் தவறாமல் பின்பற்றவேண்டும். மேலும் மாணவர்கள் பாதுகாப்பு நலன் குறித்து மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரால் வழங்கப்பட்ட பார்வை (9)ல் காணும் அறிவுரைகள் தவறாது கடைபிடிக்கப்படவேண்டும். மேலும் துறையால் அவ்வவ்போது வழங்கப்படும் அறிவுரைகள், நிபந்தனைகள் அனைத்தும் பள்ளியின் நிர்வாகத்தால் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

20. எல்.கே.ஜி முதல் 3 வகுப்புகள் வரை தரைத் தளத்தில் மட்டுமே செயல்படவேண்டும்.

21. இப்பள்ளி வளாகத்தில் இப்பள்ளி செயல்பாட்டினைத் தவிர குடியிருப்புகளோ அவ்வாறு வியாபார நோக்கு கொண்ட எந்த கடைகளோ அல்லது வேறு எந்த நிறுவனமோ இருத்தல் கூடாது.

22. மாற்றுத் திறன் குழந்தைகளுக்காக (ramp) சாய்தளம் மற்றும் (handrails) கைப்பிடிமான வசதிகள் பள்ளி மற்றும் கழிப்பறைகளில் ஏற்படுத்தப்படவேண்டும்.

23. இவ்வங்கீகாரம் முடிவடையும் நாளுக்கு, மூன்று மாதங்களுக்கு முன்னரே தொடர் அங்கீகாரம் கோரும் கருத்துரு உரிய அனைத்து விவரங்கள் மற்றும் இணைப்புகளுடன் கீழே ஒப்பமிட்டவருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

24. அரசாணை எண். 270 ப.க.துறை நாள் 22.10.2012ன்படி அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ~~இணை~~ இயக்குநர் .

நகல்:

1. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர், திருநெல்வேலி

5/9/13

பி.தே 05/09

14

# RENEWAL OF CERTIFICATE OF RECOGNITION

## CHIEF EDUCATION OFFICER, KANNIYAKUMARI

R.C.No.K.DIS.No.001442 /D5/2022 , Dt: 26/03/2022

Sub : Renewal of Certificate of Recognitiion – Reg

Ref 1 Application from the Secretary / Correspondent **ARUNODAYA VIDYALAYA MATRICULATION SCHOOL, MANJALUMOODU (UDISE : 33300700825) for Recognition dated ---------**

2 District Educational Officer, Thiruvattar Letter .No.3873/A2/2021, dt. /02/2022

The application for the Certificate of Recognition cited above, has been considered by the Competent Authority. The School has already been given Certificate of Recognition under Tamil Nadu Right of Children to Free and Compulsory Education Rules 2011 for classes **LKG to 10**

Now the application has been received for renewal of certificate of recognition for classes **LKG to 10**

After perusing the applications,documents and visit reports, the Competent Authority is satisfied that the Educational Agency has fulfilled the conditions prescribed for the Renewal of Recognition.

Therefore, the competent Authority hereby renews the certificates of recognition to the above said school for the classes **LKG** to **10** with effect from **01/06/21 to 31/05/2024**

The above renewal is subject to the following conditions.

1. The Educational Agency shall always keep the structural stability certificate, sanitary certificate, building license and fire and rescue safety certificate current and valid.
2. The Educational Agency shall abide by the provisions contained in the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act 1973 and Rules 1974 framed thereunder.
3. The Educational Agency shall abide by the instructions issued by the officials from time to time.
4. The Educational Agency / School shall abide by the provisions contained in the
   i. Tamil Nadu Tamil Learning Act, 2006.
   ii. Tamil Nadu Schools (Regulation of collection of fees)Act,2009 and rules made thereunder.
   iii. Tamil Nadu Right of Children to Free and Compulsory Education Act 2009 and TamilNadu Rules 2011 and rules made thereunder.
5. The school shall admit at the entry level to the extent of 25% of the strength in each class.
6. The School shall maintain a separate bank account for the purpose of reimbursement.
7. The school shall not collect any capitation fee and subject the child or his or her parent or guardian to any screening procedure.
8. The school shall not deny admission to any child
   i. For lack of age proof if such admission is sought subsequent to the extended period prescribed for admission.
   ii. On the ground of religion, caste or race, place of birth or any of them.
9. The school shall ensure that
   i. No child admitted shall be held back in any class or expelled from school till the completion of elementary education in a school.
   ii. No child shall be subjected to physical punishment or mental harassment.
   iii. No child is required to pass any board examination till the completion of elementary education.
   iv. Every child completing elementary education shall be awarded a certificate as laid down under rule 21 of the Tamil Nadu Right of Children to Free and Compulsory Education Act 2009.

v. Inclusion of student with disabilities / special needs as per provision of the Act.

vi. The teachers are recruited with minimum qualifications as laid under section 23(1) of the Tamil Nadu Right of Children to Free and Compulsory Education Act 2009:

Provided that the teachers who, at the commencement of this Act do not possess minimum qualification shall acquire such minimum qualifications within a period of 5 years.

vii. The teacher performs his duties specified under sub-section (1) of section 24 of the TamilNadu Right of Children to Free and Compulsory Education Act 2009 and

viii. The teacher shall not engage himself for private teaching activities.

10. The school shall follow the syllabus on the basis of curriculum laid down by appropriate authority.
11. The school shall maintain the standards and norms as specified in section 19 of the Act.
12. No unrecognized classes shall run within the premises of the school or outside in the name of the school.
13. The school building or other structures and the grounds are used only for the purpose of education and skill development.
14. The school is run by a society registered under the Tamil Nadu Societies Registration Act 1975 (Tamil Nadu Act 27 of 1975) or public trust constituted under any law for the time being in force.
15. The school is not run for profit to any individual, group or association of individuals or any other persons.
16. The accounts should be audited and certified by a Chartered Accountant and proper accounts statements should be prepared. A copy each of the Statements of Accounts should be sent every year to the competent authority granting recognition.
17. The school shall furnish such reports and information as may be required by the competent authority from time to time and shall comply with such instructions of the State Government or the competent authority as maybe issued to secure the continued fulfillment of the condition of recognition or the removal of deficiencies in working of the school.
18. If it is found out at any point of time that the Educational Agency has violated any of the conditions prescribed for recognition, the recognition granted is liable to be withdrawn.
19. FEES DETERMINED BY THE COMMITTEE SHOULD BE POSTED ON THE BOARD.

The receipt of these proceedings should be acknowledged.

30.3.22

CHIEF EDUCATION OFFICER,
KANNIYAKUMARI

26/03/22

TO
The Secretary / Correspondent,
**ARUNODAYA VIDYALAYA MATRICULATION SCHOOL, MANJALUMOODU (UDISE : 33300700825) KANNIYAKUMARI DISTRICT.629151**

Copy to
1. Director of Matriculation Schools, Chennai -6.
2. District Educational Officer, THIRUVATTAR
3. Copy to file.